# எலிக்காய்ச்சல்

## லெப்ரோஸ்பைரோஸிஸ்

இவ் ஆவணம் விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டது


சுகாதாரக் கல்விப் பணியகம்,
சுகாதார அமைச்சு
இல: 2, கிங்ஸ்லி வீதி
கொழும்பு 8.

தொற்று நோயியல் பிரிவு,
சுகாதார அமைச்சு,
இல: 231, டி சேரம் பிளேஸ்,
கொழும்பு - 10

# எலிக்காய்ச்சல் என்றால் என்ன?

- எலிக்காய்ச்சலானது ( வயல் காய்ச்சல் /சுரங்கக் காய்ச்சல் /சேற்றுக்காய்ச்சல்) எலிகளால் அல்லது வேறு சில விலங்குகளால் (மாடுகள் / எருமைகள்) பரப்பப்படும் காய்ச்சலாகும்.

- இந்த நோயானது மனிதரில் இருந்து மனிதருக்குத் தொற்றுவதில்லை



இந்த நோயைக் காவும் காவி

# எலிக்காய்ச்சல் கிருமியான பக்ரீரியாவானது....

- எலிக்காய்ச்சல் ஆனது பக்ரீரியா எனும் நுண்ணுயிர் வகையைச் சேர்ந்த ஒரு கிருமியால் உருவாகிறது.
- இக் கிருமி தொற்றிய எலிகளின் சிறுநீர் ஊடாகவே அந்த பக்ரீரியா வெளிச்சூழலுக்கு வந்து சேர்கிறது.
- இவ்வாறு வெளியேறிய பக்ரீரியாவானது வயல்களில் காணப்படும் சிறு கிடங்குகளில் நிற்கும் நீரிலும், வயல்களில் தேங்கியுள்ள நீர்ப்பரப்புகளிலும் தங்கிவிடுகிறது.




லெப்ரோஸ்பைரோஸிஸ் பக்ரீரியா

# எவ்வாறு பக்ரீரியா மனித உடலுக்குள் செல்கிறது ?

- ஏற்கெனவே தோலில் இருக்கும் காயங்கள் மற்றும் வயலில் வேலைசெய்யும்போது தோலில் ஏற்படக்கூடிய சிறு சிராய்ப்புக் காயங்கள், புண்கள், தோல் உராய்வுகள் என்பன வழியாக மனித உடலுக்குள் இந்த பக்ரீரியா நுழைகிறது.
- வயல்களுக்கு அண்மையில் நீர்தேங்கியுள்ள குளம் குட்டைகளில் குளிக்கும்போது அந்த நீர்நிலைகளில் காணப்படும் பக்ரீரியாவானது கண்களில் உள்ள மென்சவ்வுகள் ஊடாக மனித உடலுக்குள் நுழைகிறது.



**இந்த நீரில் கலந்திருக்கும் பக்ரீரியாவே உடலினுள் செல்கிறது.**

**பாதங்களில் காயங்கள் இருப்பின் மிகுந்த அவதானமாக இருங்கள்**

# எவ்வாறு பக்ரீரியா மனித உடலுக்குள் செல்கிறது?

- பக்ரீரியா தேங்கியுள்ள நீரை மனிதர்கள் அருந்தும் போதும் அந்த பக்ரீரியா மனித உடலுக்குள் செல்கிறது.

இந்த நீரில் கலந்திருக்கும் பக்ரீரியாவே உடலினுள் செல்கிறது.




இந்த நீரில் முகம் கழுவுதல் உகந்ததல்ல.

# எலிக்காய்ச்சல் தொற்றுக்கு ஆளாகும் ஆபத்து உள்ளவர்கள்

- வயல்களில் இறங்கி வேலைசெய்யும் விவசாயிகளாயின் உங்களுக்கு இந்த நோய் தொற்றும் அபாயம் அதிகம் உள்ளது.
- விவசாயிகளுக்கு மட்டும் அல்லாது வேறுதேவைகளுக்காக வயல்களில் இறங்கும் எவருக்கும் இந்த நோய் தொற்றும் அபாயம் உள்ளது.



நீண்டகாலமாக கைவிடப்பட்ட வயல்நிலங்கள்




வயலில் வேலைசெய்யும் பெண்கள்

# நோய் அறிகுறிகள் எவை?

- காய்ச்சல்
- உடம்பு உளைச்சல் அல்லது உடல் நோதல்
- தலையிடி
- உடல் களைப்பு அல்லது உடல் அலுப்பு

மேலே கூறப்பட்ட பிரதான நோய் அறிகுறிகளுடன்,

- கண் சிவத்தல்
- சத்தி (வாந்தி)
- கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல்
- சிறுநீருடன் இரத்தம் கலந்து வெளியேறுதல்
- சிறுநீர் வெளியேறுவது குறைதல்

ஆகிய நோய் அறிகுறிகள் இருக்கலாம்.

ஆனால், சில நோயாளிகளுக்கு எந்த ஒரு குணம் குறியும் தென்படாது

# பாதிப்புக்கள்

- ஒருபோதும் எந்த ஒரு சிகிச்சையினையும் பெறாமல் இருந்தால், சிறுநீரகங்கள், இருதயம், மூளை, ஈரல் என்பவை பாதிப்படையும்.
- கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல், சிறுநீருடன் இரத்தம் கலந்து வெளியேறுதல், சிறுநீர் வெளியேறுவது குறைதல் ஆகிய அறிகுறிகள் இந்த நிலையில் ஏற்படலாம்.
- நோய் மேலும் தீவிரமடையும்போது மரணம் சம்பவிக்கலாம்

# சிகிச்சை

- எலிக்காய்ச்சலானது பக்ரீரியாவால் ஏற்படுவதால் அதனைக் குணப்படுத்துவதற்கு நுண்ணுயிர் கொல்லி (அன்ரிபயற்றிக்) சிகிச்சை நடைமுறையில் உள்ளது.
- உரியகாலத்தில் தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நோயாளிகள் இந்த நோயில் இருந்து முற்றாகக் குணமடைய முடியும்.

# எலிக்காய்ச்சலைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

- எலிகளைக் கட்டுப்படுத்துதல்.
- வயல்களைச் சூழவுள்ள பிரதேசங்களைச் சுத்தமாகப் பேணுதல்.
- தண்ணீர் தேங்கிநிற்காது வழிந்தோடுவதற்கு வழி ஏற்படுத்துதல்.




வயல்களைச் சூழ குப்பைகளைப் போடுவது எலிகள் பெருகுவதற்கு இடமளிக்கும்




வயலிலிருந்து நீரை வடிந்தோடவிடுவதால் எலிக்காய்ச்சல் பரவுதலைத் தடுக்கலாம்.

# எலிக்காய்ச்சலைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

- வயல்களைப் பண்படுத்தும்போது சாத்தியமான நேரங்களில் சப்பாத்து மற்றும் கையுறைகளைப் பயன்படுத்துதல்.
- வயல்வரம்புகளை நீர்தேங்கும் குழிகள் இன்றிச் சுத்தமாகப் பராமரித்தல்.
- வயல்களுக்கும் மற்றும் நீர்தேங்கியுள்ள இடங்களுக்கும் அனாவசியமாகச் செல்லுவதைத் தவிர்த்தல்
- வயல்களிலும் அருகில் காணப்படும் நீர்தேங்கியுள்ள குட்டைகள் குளங்களிலும் குளித்தல், முகம் கழுவுதல், வாய் கழுவுதல் ( வாய் கொப்பளித்தல்) என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ளுதல்.
- பாதுகாப்பற்ற கிணறுகளைச் சுற்றிச் சுவர் கட்டுவதன் மூலம் விலங்குகளின் மலம் மற்றும் சிறுநீர் கழிவுகள் கிணற்றினுள் செல்லுவதைத் தடுத்தல்.

வரம்புகளை சுத்தமாகப் பராமரிப்பது எலிக்காய்ச்சல் பரம்பலைத் தடுக்க உதவும்



# எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு பின்பற்றவேண்டிய நடைமுறைகள்

- பீடைநாசினிகளை உபயோகித்தல்
- எலிப் பொறிகளைப் பயன்படுத்துதல்
- எலி வளைகளை அழித்தல்
- எலிகளை வேட்டையாடும் பாம்புகள், ஆந்தை, மற்றும் ஓணாண்கள் என்பற்றைக் கொல்லுவதைத் தவிர்த்தல்.
- பாரம்பரிய முறைகள்




கபரகொய்யா

# எலிக்காய்ச்சலைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும் ?

- எலிக்காய்ச்சலைத் தடுப்பதற்குரிய ஆலோசனைகளைப் பெறுவதற்கு, வயல்வேலை செய்யும் அனைவரும் தத்தமது பகுதிக்கு உரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரிடம் கலந்துரையாடவேண்டும்.
- உங்களுக்கு எலிக்காய்ச்சல் அறிகுறிகள் ஏதாவது தென்படுவதாகச் சந்தேகப்பட்டால், உடனடியாக தகுதிவாய்ந்த மருத்துவரைச் சந்தியுங்கள். வைத்தியரிடம் உங்கள் குணங்குறிகளைச் சொல்லும்போது நீங்கள் வயல்நிலங்களில் வேலைசெய்பவர் என்பதைத் தவறாது தெரிவியுங்கள்.




வைத்தியர் நோயாளியைப் பரிசோதித்தல்

# உங்கள் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் பரவினால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் தொற்றிய நோயாளி இனங்காணப்பட்டால், உடனடியாக சுகாதாரப் பிரிவினருக்கு அறிவியுங்கள்.
- உங்கள் பகுதிக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்




பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுடன் கலந்துரையாடுதல்



# நன்றி